மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு குடும்ப நலத்தைக் காக்கின்றவிதத்திலே ஒரு குடும்பத்திற்கு ஒரு பிள்ளை, வீட்டிற்கு ஒரு மரம் என்ற அடிப்படையிலே சொல்லிக்கொண்டு இருக்கிறோம். ஒரு குழந்தை பெற்று, அந்தக் குழந்தையை நன்றாகப் படிக்க வைத்து அந்தக் குழந்தையின் திருக்கரத்தால் அந்த தென்னங்கன்றை வளர்த்து அந்தக் குடும்பம் வாழ்வு பெற இந்த அரசு வழிவகைச்செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி. சொக்கலிங்கம்,.

திரு. பி. சொக்கலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச தென்னங்கன்று வழங்குவது போல அந்த பிள்ளைகளுக்கு மாங்கன்றுகளும், பலாக் கன்றுகளும் இலவசமாக வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டக்கலைத் துறையின் சார்பாக தரிசு நிலங்களையெல்லாம் பூந்தோட்டங்கள், பழத்தோட்டங்கள் உருவாக்குவதற்கு மானிய விலையிலேதான் அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. இது போன்று இலவச பழக் கன்றுகள் தருவதற்கு இந்த அரசிடத்திலே எந்த செயல் திட்டமும் ஆய்வில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 477, திரு. இரா. அப்பு நடேசன். இருக்கையில் இல்லை, திரு கே.பி. ராஜு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

477—

சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தால் வசூலிக்கப்படும் காலிமனை ஒதுக்கீட்டு கட்டணம்.

*14472 திரு. இரா. அப்பு நடேசன்:

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அங்கீகரிக்கப்படாத வீட்டுமனையில் (Un pproved plots) கட்டிடம் கட்ட அனுமதி (Approval) வழங்கப்படும்போது சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தால் (M.M.D.A. வசூலிக்கப்படும் காலிமனை ஒதுக்கீட்டு கட்டணம் (OpnSpace) reservation charg(s) எந்த அடிப்படையில் கணக்கிடப்படுகிறது?

(ஆ) இந்தக்கட்டணம் வசூலிப்பதில் ஏதாவது விலக்கு அளிக்கப்படின் அதன் விவரம் என்ன

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) காலிமனை ஒதுக்கீட்டுக் கட்டணம் என்பது, எந்த ஒரு மனைப் பிரிவு முன் அனுமதியின்றி 1975-க்குப் பின்பும், 1989-க்கு முன்பும் செய்யப்பட்டு இருந்தும், அம்மனைகள் உள்ளாட்சியின் பராமரிப்பில் உள்ள அல்லது உள்ளாட்சியினால் பொதுப்பாதை என அறிவிக்கப்பட்ட சாலையிலிருந்து அணுகுப் பாதை பெற்றிருந்தாலும், அம்மனைப் பிரிவின் பரப்பளவு 75 சென்ட்டுகளுக்கு அதாவது 3000 சதுர மீட்டருக்கு மேல் அமைந்து இருக்குமாயின் செலுத்த வேண்டிய கட்டணம்தான் காலிமனை ஒதுக்கீட்டுக் கட்டணம் என்று சொல்லப்படுகிறது. இக்காலிமனை ஒதுக்கீட்டுக் கட்டணம் பத்திர உதவிப் பதிவாளரால் நிர்ணயிக்கப்படும் ஆதாரவிலையில் 10 விழுக்காடுத் தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இக்கட்டணம் செலுத்திய பின்புதான் திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

(ஆ) இக்கட்டணம் வசூலிப்பதில், விதிவிலக்களிக்க எந்த வித வகையும் இல்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. கே. பி. ராஜு: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை எம்.எம்.டி.ஏ. நிறுவனத்தினால் காலியிடங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படுவதில்லை என்று சொன்னார்கள். இப்போது ஒவ்வொரு வீடுகளிலும் சுமார் 1 கிரவுண்ட் இடம், அல்லது இரண்டு கிரவுண்ட் இடம் வீடு கட்டியது போக மீதி காலியாக இருக்கிறது. ஓப்பன் பிளேஸாக இருக்கிறது. வேஸ்ட் பிளேஸாக இருக்கிறது. அது போக பார்க் போன்ற இடங்கள் இருக்கின்றன. வீட்டிலேயே ஒரு மினி பார்க் கூட வைத்திருக்கிறார்கள். இப்படி பொது மக்கள் அவர்களுடைய சௌகரியத்திற்காக வைத்துக்கொள்கின்ற இடங்களுக்காவது அந்த எம்.எம்.டி.ஏ. விலிருந்து அந்த காலி நிலங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 26]

முற்பகல் 10.55

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டச் சட்டம் 1971-ன் கீழ் மற்றும் வளர்ச்சி கட்டுப்பாடு விதிகளின் கீழ் மனைப் பரப்பு 3 ஆயிரம் சதுர மீட்டருக்கு அதிகமாக இருக்குமாயின் இந்தக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. சின்ன, சின்ன வீட்டு மனைகளுக்கு இப்படிப்பட்ட நிலை இல்லை என்பதையும் இப்படி 75 செண்ட் அல்லது 3 ஆயிரம் சதுர மீட்டருக்கு அதிகமாக இருக்கின்ற நிலப்பரப்பிலிருந்து கிடைக்கப்பெறுகின்ற இந்தக் கட்டணத்தை ஜெனரல் டெவலப்மென்ட் பண்டு என்று சொல்லக்கூடிய சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திலுள்ள பொது வளர்ச்சி நிதியில் இது வைக்கப்படுகிறது. சென்னை பெருநகர பகுதிக்குத் தேவைப்படுகின்ற திட்டங்களுக்கு, வளர்ச்சித் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு இந்தப் பணத்தை செலவழிக்கிறோம். அதேபோல உள்ளாட்சித் துறையிலும் பூங்காக்கள் அமைத்தல் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல், வணிக வளாகங்கள் அமைத்தல் மற்றும் இடபாடு மேம்பாடு, சாலைகள் மேம்பாடு போன்ற எல்லா வகையான வளர்ச்சி, மேம்பாட்டுத் திட்டங்களுக்கு இந்தக் கட்டணம் பயன்படுகின்ற காரணத்தால் விதிவிலக்கு அளிக்க வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 478 டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

478—

ஸ்டான்மோர் எஸ்டேட்டிற்குச் சொந்தமான நிலங்கள்

*9699—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வால்பாறை குன்றுகள் கிராமம், வால்பாறை நகரிய விளையாட்டு மைதானத்திற்கு அருகிலுள்ள ஸ்டான்மோர் எஸ்டேட்டிற்குச் சொந்தமான நிலத்தை கையகப்படுத்தி ஆதிதிராவிடர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம் ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதுபற்றி அப்பகுதி ஆதிதிராவிடர் மக்களிடமிருந்து மாவட்ட ஆட்சியருக்குக் கோரிக்கை எதுவும் வரப்பெற